நாள்: 05.08.2026

OS. 337/2019
பெயர் ஜெயராஜ்
வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

நான் புலிக்குத்தி, அய்யப்பசாமி என்பவர் வாதி அன்னமயிலுக்கு தம்பி என்றால் சரிதான். எனக்கு அவர்களை தெரியும். அன்னமயில் மகளை தான் அய்யப்பசாமி திருமணம் செய்துள்ளார். அவர்களுக்குள் சுமூக உறவு உள்ளது என்றால் இருக்கும். நானும், வழக்கு தரப்பினர்களும் புலிக்குத்தியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதி உள்ளூர் என்பதால் எனக்கு தெரியும். வாதி ஏலச்சீட்டு நடத்திவந்தார்களா என்றால் இல்லை. வாதி சீட்டு நடத்திவந்தார்கள் என்றும், நான் அதை தெரிந்தும், அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்னமயில், பாண்டியன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பணம் கொடுக்கல் வாங்கல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் சொல்வது போல் ரூ.2,00,000/- வாதி அன்னமயிலிடம் பிரதிவாதிகள் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் எண்ணி கொடுத்தேன். மொத்தமாக 2 லட்சம் பணத்தை அன்னமயில் பாண்டியனிடம் கொடுத்தார். குறுகிய காலத்தில் பணத்தை திருப்பி கொடுப்பதற்காக 2 புரோநோட்டுகள் எழுதிக்கொடுத்தார்.

2 புரோநோட்டுகளும் ஒரே நாளில், ஒரே காலகட்டத்திற்கு எழுதப்பட்டுள்ள நிலையில் நான் சொல்வது போல் குறுகிய காலத்தில் பணம் செலுத்துவதற்காக 2 புரோநோட்டுகள் எழுதப்பட்டது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வாதி ஏலச்சீட்டு நடத்தி வந்தார் என்றும், அந்த ஏலச்சீட்டுக்காக 3 லட்சத்திற்கு 3 புரோநோட்டும், 1 லட்சத்திற்கு 1 புரோநோட்டும் பொறுப்புக்காக வாதியிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1 லட்சம் புரோநோட்டை வைத்து வாதி அன்னமயில் அவரது சகோதரர் அய்யப்பசாமியை வைத்து உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு வாதிக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டு முதலாவது மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. அந்த வழக்கில் நான் உத்தமபாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அய்யப்பசாமிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சாட்சியம் அளிக்கும்போது அன்னமயிலுக்கும், அய்யப்பசாமிக்கும் சரியான சுமூக உறவு இல்லை என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை.

10.08.2018 புரோநோட்டு எழுதப்பட்டது. அந்த புரோநோட்டில் நான் ஒரு சாட்சியாகவும், வேறு யாரும்இல்லாததால் 2ம் பிரதிவாதி ஈஸ்வரி ரெவண்யூ ஸ்டாம்ப்க்கு கீழ் ஒரு கையொப்பமும், சாட்சியாகவும் கையெழுத்து போட்டுள்ளார். ஈஸ்வரி கையொப்பம் போட்டபின்னர் தான நான் கையொப்பம் போட்டேன்.10.08.2018 1ம் பிரதிவாதி புலிக்குத்தியில் இல்லை என்றும், அவர் தன்னுடைய மருத்துவ சிகிச்சைக்காக மதுரையில் இருந்தார் என்றால் சரியல்ல. வாதி நடத்தி வந்த

ஏலச்சீட்டுக்கு பொறுப்புக்காக கொடுக்கப்பட்ட நிரப்பப்படாத புரோநோட்டில் அவர் கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் பொய் சாட்சியம் என்பதால் ஏற்றுக்கொள்ளக்கூடயது அல்ல என்றால் சரியல்ல. உண்மையில் என் முன்னிலையில் எந்த பணமும் வாதி பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றும், ஆனால் நான் 10.08.2018 எங்கு வைத்து, எத்தனை மணிக்கு வாதி, பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்தார் என்பதை வாதியும், சொல்லவில்லை, நானும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, மாலை 4 மணிக்கு பணம் கொடுத்தார். 4 மணிக்கு பணம் கொடுத்தார் என்பது தவறானது என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.05 18:44:11 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்